2017 மார்ச் 24]

மாண்புமிகு திரு. உடுமலை K. **ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரகத் திட்டத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2017), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

@ 23–3–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2017 மார்ச் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன், என்னவென்று சொல்லுங்கள்.

பிற்பகல் 3–10

***திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்திற்கு அறிமுக நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நேற்றே என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறேன். அதற்கான காரணத்தை இப்போது இரண்டு நிமிடங்களில் சொல்கிறேன். Yesterday we have already talked about progressive taxes versus regressive taxes. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் இன்றைக்கு அதைப் பற்றிப் பேசியிருக்கிறார். So, in general, we are against regressive taxes, particularly on products like petrol and diesel, which are critical input costs for fishermen, farmers, transportation, etc. We have the second concern that such price increases will either result in inflation in goods like vegetables, fish and so forth or they will result in reduced earnings and reduced life quality for small traders, small farmers, fishermen, etc., Additionally, we have already stated that when the crude oil price is only about 55 dollars per barrel today and if we have already raised the taxes so high, that the retail prices are roughly where they were when the crude oil price was 110 dollars per barrel. We have left ourselves no room for maneuvering, i.e. should crude oil price rise again tomorrow, we will either have to cut back the tax or allow diesel and petrol to reach record levels. If we do the former, we will reduce our revenue and increase budget deficit, and if we do the latter, we will induce further inflation and strain on the economy. This is precisely the reason between 2006–2011, when the DMK Government under Thalaivar Kalaignar, reduced the VAT three times on such products to compensate for increases in oil price of Central Government Excise.

In any event, I just have two questions to ask today. When you undertook such an exercise to raise these rates, why did you decide these rates why 4%, why 7%, why 25%, why 34%? I assume, as a responsible Government, you did some kind of cost benefit analysis. இதனால் வரும் பயன் என்ன? இதனால் வரக்கூடிய பாதிப்புகள் என்ன? And you did such a cost benefit analysis, considering many scenarios of future oil prices and future G.S.D.P. growth. Under such circumstances, Hon.Speaker Sir, I have two questions for the Hon'ble Minister.

2017 மார்ச் 24] [திரு. பழனிவேல் தியாக ராஜன்]

இந்த மாதிரி ஓர் ஆய்வு செய்யப்பட்டால் அதனுடைய result–ஐ ஏன் எங்களிடம் பகிர்ந்துகொள்ளவில்லை? இரண்டாவது, ஆய்வு செய்யப்படவில்லை என்றால், ஆய்வு செய்யாமல் எப்படி இந்த முடிவை எடுத்தீர்கள்? இப்போது எங்களுக்குத் தெரிந்தவரை, இருக்கிற information–ஐ வைத்து நாங்கள் சொல்ல விரும்புவது, இது, பொது மக்கள், சிறு, குறு விவசாயிகள், வணிகர்கள், மீனவர்கள் எல்லோரையும் பாதிக்கும். மேலும், இதை இயற்றுவதால் பயங்கரமாகப் பாதிக்கப்பட்ட மக்கள், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், இலங்கை பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மீனவர்கள், சமுதாயக் கேடான demonetisation–ஆல் பாதிக்கப்பட்ட கிராமப்புற மக்கள், weaker sections of society, ஆகியோர்மீது additional risk–ஐ ஏற்படுத்துகிற வகையில், இந்தத் திருத்தம் இருப்பதால், நாங்கள் இதை முற்றிலும் எதிர்க்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் மற்றும் நிதித் துறைச் செயலாளர் ஆகியோர் அனைவரும் நான் வெளியிலே பேசியவற்றிற்கெல்லாம் அதிகக் கவனம் செலுத்தி, அதற்கெல்லாம் பதிலுரை கொடுத்திருக்கிறார்கள். மிகவும் மரியாதை கொடுத்ததற்கு நன்றி சொல்லி, நான் அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் குறித்து நீண்டதொரு விளக்கவுரையை இங்கே தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றார்கள். அதையே நானும் மீண்டும் வலியுறுத்தியதாகக் கருதி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2–ல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2017 மார்ச் 24] [திரு. கே.சி. வீரமணி]

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–15

(ஊ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2017), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/ 2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 23–3–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.